13 115

ஓம்

ஸற்குருவேதுணை.

ஞானரத்தினக்கவிப்புலமை

# குணமணிக் கீர்த்தனை.

சுத்தப்பதிப்பு

ஓம்

பிரஸாதகன்

சென்னை

A. ராமகிருஷ்ண நாயுடு

அவர்களால்

மதுரை ஸ்ரீ பரமேஸ்வரி பிரஸில்
...ப்பிக்கப்பெற்றது.

1933 [அணா 2

OFFICE OF THE ... 3-JAN 1934 MADRAS

O, IX
N33
122546

ஓம்

சற்குருவே துணை.

# குணமணி கீர்த்தனை.

காப்பு.

ஓங்காரவட்டத்துளே ஓங்கியெவர்க்குந்தெரியா
பாங்காகி நின்றிலங்கும் பரமபரி பூரணனை
சிங்காரமாகவுள்ளந்தன்னிலே சேவை செய்து
தாங்காகி நின்றிலங்கும் தமிழிதற்கு காப்பாமே.

பூங்காவினோதமே என்ற மெட்டு.

பல்லவி

ஓங்கார பிரம்மமே உரயப்பரிபூர்ண பிரபோதமே (ஓங்)
உற்றார்க்கும் மற்றார்க்கும் அருள்தரும் (ஓங்)
துங்கெங்கும் எங்கெங்கும் ஸமநிலை
தங்கெங்கும் எங்கெங்கும் ஸாஸா (ஓங்)
பொங்கமலம் தன்னில்மனம் வுரைநிகர்
நன்பெருமிப் பன்மயரச் சுடரொளி (ஓங்)
பூனவஞான தயாளகுணேசன மானவதான பரோபரபீடன (ஓங்)
புகழத்துலபர சுகிர்தச்சுருதிக
துலகர்க்கனுபவ முறமுச்சிகபற (ஓங்)
உருவுற்றிருபொற் புருகுற்றிருனற்
றருளுற்றிருசர் ச்சனருற்றுணர்வித (ஓங்)

சரணம்

ஆங்காரத்திடமும் மலமும் அகற்றிநின்றோர்க்குகற்ற ஜெயமே
ஆருருக்கப்பால் நின்ற அகப்பொருளதை யுகப்புனிதமே
சிங்காரச்சுடரொளி கண்டு சினத்தையற்றோற்கினித்தநயமே
சித்திரவர்ணத் தத்துவமும் மூலத்தெளிவே—யோக
வித்தயர்கண் தெரிசித்திடு மற்றார்க்குற்றிழிவே—தியாக
சித்திகள் வட்டத்தாமரையில் விளையும் பயிரே
விரிந்தமயமே—சிரந்தகயமே
நிரைந்தநயமே—எழுந்தசுயமே
ஞானரக்ஷணன் உனைதெரிசித்திட
தியானமுற்றேன் உற்றேன் விகசித (ஓங்)

172544

## குணமணி கீர்த்தனை.

ஸங்கராபரணம்] பழனிநாதன் என்ற மெட்டு. [ரூபகதாளம்

மனிதர் திரேகம் மடிந்துபோகும் (மனி)
மண்டலீ ராஜாக்களும்யெம தண்டனையொன்றுமே கண்டனர் (மனி)
மண் பெண் பொன்னாசையெலாம் கண்முன் பஞ்சானதுகாண் (மனி)
மைந்தரும் தாரமும் சுற்றமும் அந்தமயானம் வரைக்குமே (மனி)

மகுடம்

மாடடனே ஆடுபுது மாடிசுடு காடுவர பாடுபடுமூடரெனும் (மனி)
வஸ்திரமும் வுத்தியோகலெக்ஷணமும்
அஸ்திபொடியானவுடன் கற்பனையே (மனி)
வம்படித்து சண்டையிட்டு புண்படுத்தும்
துன்பர்களும் கண்டசுகம் ஒன்றுமில்லை (மனி)

சரணம்

ஆத்மயோகம் அழிந்தபோகம் அறிந்திடுமதனால் பிரவாகம்
ஸாஸ்திரம் சொல்லும் மாத்திரயோகம்
சுந்ததமு மன்புடனே முந்திடவே ஸங்கரனே
சங்கமுழங்கிடு சுந்தரம் துங்கமனத்திகழ் மந்திரம்
சாதுகடாஜனேதும் வேதவாக்கிய மீதென்றாகும் (மனி)

பண்டிதமோதிலால்நேரை பரிகோடுத்தோமே என்ற மெட்டு

2004

பல்லவி

தஸரத ராஜவம்ச தேவகுமாரா
தேவகுமாராகதி மேவுங்கம் பீரா (தச)

784.0954

அநுபல்லவி

பூசுரர்வணங்கி நின்று பூபாத மினைமகிழ்ந்து
பூசைதவம்புரிந்த எங்கள் புண்யதயாளா
புண்யதயாளா கதி கண்ய பூபாலா (தச)

தோகையரு

வேலாடு வித்தைபல விரிவாக கற்றுமகிழுளமாட தேர்ச்சியுற்று
வீறமுனி விஸ்வாமித்ரருடனருள் மிதியோங்கமேன்மைபெற்று
நூலாடுவாத்மீக யோகமா முறைதவம் ஸாத்மீக ஸாந்தியுற்று
நூதனஸ்த்ராதி விபுதானேர்க தேவகண ஆசீர்வதம் புரிந்து

6-1x
N133

பாட்டு

தாடகயினுயிர்வதைத்து தாழாத பேர்விளைத்து
வாடாத ராவணனை வாழ்வெடுத்தீரே
வாழ்வெடுத்தீரே வீரம் பாழ்படுத்தீரே (த)

ஆகாதவில்வளைத்து ஆரிழையை மணம்முடித்து
வாகைபெற கானகத்தில் வாழ்வெடுத்தீரே
வாழ்வெடுத்தீரே அயோத்தி தான்விடுத்தீரே (த)

வானர்துதி ஞானரக்ஷணன் வாறுரைத்தெனும்சரிதம்
பூணுந்தமிழ் சிந்துரைத்தேன் புண்ணிய மூர்த்தே
புண்ணிய மூர்த்தே புகழ் நண்யசுகூர்த்தே (த)

பக்திபரங்குன்ருேனே என்ற மெட்டு

பல்லவி

பிரம்ம நாமத்தை பஜிப்போம் (பிர)

அநுபல்லவி

தர்ம யோகத்தில் நிலைப்போம் ஞான (பிர)

சரணம்

கர்மக்ஷேத்ரமெனு ஞானசாஸ்த்ரவை போகநேத்ரநடுவாசல்—வர்ணகலை
நின்றிலங்குமணிவூசல் விஜயமுற
சங்கறங்கநிலை பூசல் ஜுவாலைபற (பிர)

பட்டுபோகுமிந்த எட்டுஜானுடலில்
துஷ்டதேவதைகள்பலதே இம்சைகள்
விட்டுதேறுதனு மறிதே க்ரோதமட
மட்டிகட்குறிமையிதிலெ யனுதினமும் (பிர)

நாதவிந்தெனவு மோதுபந்தமுறை நீதியென்றதுமிதுவே அறுவுருவ
மானமந்திரமுமிதுவே அடிமுடி
யற்ற தென்றதவு மிதுவே மறையினுரை (பிர)

ஞானரக்ஷணமனுதியான முற்ற தமிழ்
கானரத்ன மணிமாடம் பெரியவர்கள்
பூண்டவஜ்ரமே சபாடம் சுகிர்தநிலை
யாண்டவர்க்கிதுவெபாடம் துரிதமகல் (பிர)

பற்மானந்தமே பறங்குன்றம் என்ற மெட்டு

வர்ணிபபு.

ஸரஸ சங்கீத ஸகவாசன் மிரு சகலகலை நிறையும் வதனகெம்பீரன் (ஸ)

சமரசவஜனன் சாகோதரியன் தருந்தப்ரேமன் மதனுதிகுலன்
அமறர்களுமிவனடியே தஞ்சம் அனுதினமும்புகழ்பறிபூறணவன் (ஸ)

வரதம் பொன்த்ரேகத்தின் பளப்பு—வருணன் நல்ல
வடிவம் மன்மதத்தின் திளப்பு—காமச்சுடர்கள்

பறவிநின்றெங்குமே வளைப்பு—பகட்டும் நல்ல
பாவை எனக்கிசைந்த நற்பு —விளங்கு மிரு

பத்தொடு கணத்தவடி சித்திரவனப்பதின் பிராயம்—கறங்கள்விரி
பத்திரிநிலைத்தமலர் கொத்தனிபுனைந்திடும் ப்ரேமன்—சப்ரமஞ்சத்தில்

ஒத்துநிலை பெற்றிதம் நவித்திடும்படித்ததுந்த தீரன்—வைபோகத் தமிழ்
கற்றகன முற்றவிஜ யுற்றிடுதனிந்தவிஸ்தாரன்—சம்போகம் செய்தால்

சகல விஷயமும் சாரும் சந்தம் தவமிவரடிபணிவதுவே பெந்தம்
விகசித கவிதமிழ் ஞானரத்தினன் விதித்த போன்ற மதன குமாரன் (ஸ)

பிஸ்மில்லா ஹிர்

வெண்பா.

முச்சடக்கி பந்தடித்து மூலமுப்பாழ்கடந்த
காக்ஷி நபி நாயகராம் காரணத்தின்—சூக்ஷியமே
ஆயிரத்தெட்டுள்ளே அடங்கி நின்ற கமலவிதழ்
லாயிலாஹா வென்றதாம்

நாதநாமக்கிரியா] பல்லவி [ஆதி தாளம்

அறிந்து தொழுவாய் நீ மனமே அறிந்து தொழுவாய் நீ

அநுபல்லவி

அறிந்து தொழுதவர்க் கானந்தவீடு அநுகிசுகித்தருள் பௌசகள் நீடு
ஷறகுவழிதெரியாதவர்க்கிது மூடு
ஷறகினை பிடித்துதன் முறைகளைதேடு (அறி)

சரணம்

அஷிபொடுலாம்ஹேற மீமொடிதாலும்
அமைந்ததுபார்வெளி சகலதுமேலும்
நவிபெறமனங்கொண்டுனரிறு காலும்
நவங்கள் விளையும்ஜெப தவங்கள் மென்மேலும் (அறி)

நானெனும் மாய்கையல்லோ பவக்கூடு
நாயனைமறந்தவர்க்கணு வெனும்பாடு
தீனதின் முறைதெரிந் துளங்களிந்தாடு
திருத்தியில்லல்லாஹு வென் றறும் பறந் தேடு (அறி)

மனநிலை புத்தியால் மகிழ்பெற தாக்கி
மன்னினிற் புரிமுறை வணங்கியே தூக்கி
தன்னிலையறிந்தால் தவமுண்டு பாக்கி
தரித்துக்கொள் ஞானரஷ்ணன் வுரைத்ததுள்ளாக்கி (அறி)

பூங்காவினோதமே என்ற மெட்டு

பல்லவி

என்சாண் வுடலிலே ஏகன் நபி இறசூல் வருவாரடி (என்)

அநுபல்லவி

நெஞ்சேகலங்கிடாதே நெறிமுறைபெற்றிட குருநிலைகற்றிட
மதித்தஜிபிரில் அடுத்துநபிதமை
எடுத்து ஹபிபென புகழ்ந்து மகிழ்ந்திட (என்)

காட்டில்மறையை மீட்டபிணைபோல்
கூட்டும் சக்ராத்தினில் வந்தேகிட (என்)

வானத்தால் வளர்தானத்தால் மிகு
ஞானத்தால் மஹமூதையறிந்திட (என்)

வேதத்திருநெறி நீதக்குறுவிகள்
பாதத்தெரிசனை வாழ்த்தி நடைபெற (என்)

சரணம்

முத்தைப்போலிலங்கி வந்த முஸ்தபா நபினாதாராம்
முச்சுடரிலேயமைந்த மோனஞானவேதாராம்
முறுசல்கரசரென்னும் முஸம்மிலானநீதாராம்

முப்புவிக்கும் மெய்ப்பொருளாம்னாதர்—ஹக்கன்
முத்திரையும் பெற்ற மஹமூதர்—நானை
மோக்ஷவழிகாட்டும் பிரக்யாதர்
மலரடியை நாடி மறயவர் கொண்டாடி
மஹமூதரைத்தேடி மகிழ்ந்தே நன்பாய்ப்பாடி (என்)

பைரவி] திருபறங்குன்றில் என்ற மெட்டு [ஆதி தாளம்

பணிந்திடுமோனே பாதபங்கஜா
பாதங்கா மபூங்கா நீர் பொங்கா பறநெரியுற (ப)

## குணமணி கீர்த்தனை

மணிச்செழும் பொன்மொழி வழங்கிடா சீர்மேவி
வாழும் நீர்சூழும் பூனூரும் வரமறுளுக (ப)

குடம்புதுமைபேசும் குதாபறங்கள் வீசும்
கோனு நல்தீனு மதீனு குருபதிபுற (ப)

ஞானறஷ்ணன் போற்றும் நாவில் குடியேற்றும்
நாதர் நவநீதர் மஹமூதர் நயமுற நபி (ப)

சேந்தாளம்பு—என்ற மெட்டு

பல்லவி

லாயிலாஹா யில்லா அல்லாஹு—வென்ற கோலமேஹக் (லா)

அநுபல்லவி

லாபாயிலா யில்லல்லா ல்ாமஹு— பூபேயல்லா-
ஔலாவலா கூபத்தா இல்லா பில்லா ஹில்லல்லீம் ஒல்

லாபாயிலாயில்லல்லா லாமௌஜூ—தெ யல்லா
காப் நூன் என்றுரைத்த கற்பனையோ யாஹூவல்லா (லா)

ஹூவென்னும் ஓர்புகழே ஹூன்கூஹு—மாளிகையில்
ஹாவென்னும் ஆதம் இன்ஷான் ஹற்றெஹு—மானிற்றஹீமே(லா)

பாருளும் முஹம்மதப்பா பரமாத்மாஞானமப்பா
ஆறுருக்கப்பாலப்பா ஹு—ப்பாலிப்பாற் தற்பாய் நின்ற (ல)

---

மஹம்மதியோர் மதத்தில் என்ற மெட்டு

மஹபூபேமலர் மதுரஸவஜனு மஹராஜர் புகழ்மதிவதனு
மணிமார்பர்யேற்றும் பிரதானி அமீனூர்பெற்ற
மௌனப்பிரசங்கபோதினி
முப்புவியற்புத கற்பகரத்தின செப்புகிலொப்பரி தொப்பியஉத்தம
முன்னர் முன்னர்க்கும் மூதாதே ஆமீனூர்பெற்ற
முத்துமுசம்மீலானேரே

துங்கெங்கத் தங்கெங்கிர்தகணமே பங்கெங்களறங் கனசுபமே
துணையெனும் மினமலரடிஞநா ஆமீனூர்பெற்ற
தூதா வென் தாதா வேநீதா

பணியெதிரிடவே துணிவுரதடைசெய்
பதியர்க்கொரு மருமகனுரே
பாவம் பொருத்தருள்வீரே ஆமீனூர் பெற்ற
பவழச்செங் கோலணிந்தோரே

ஹாஷீம்குல பொற்சுடரென்று அனைவோர்களுமே புகழ்விண்டு
அப்துல்லா நெற்றிமீதிலே துலங்கி வந்து
ஆனந்தமாகப் பொழிந்து

வாடிப்பரமுக்தியிழந்த மானிடருக் கானமருந்து
மக்கத்திலேயே வுதித்தார் குறைஷிகுல மாணிக்கமாச் செனித்தார்

மானிடரெல்லாம் சோதரரென்றும் கல்லை வணங்குகின்றார்
மற்றும் இழிகுலத்தோராம் மாச்சிலைகள் மாற்றும்வழியுரைத்தாராம்

அண்டம்புவனம் மலைகடலும்பின் ஒன்றும் நிலையிலை
யென்றும் காட்டி அரியவனை வணங்குங்கள்
அதுவே முத்தி வுண்மை தெரிந்துகொள்ளுங்கள்

192546 600 008 07/15 A83

பிலஹரி] நாகூர் ஆண்டவர் துதி [ரூபகம்

சென்தூர் நாயகமே என்றமெட்டு

பல்லவி

நாகூர்நாயகமே செழும் நளினமலர்ப்பாதம் தாரும் தாயகமே (நா)

அநுபல்லவி

நாலா கலையுணர்செங் கோலா கலியுகநன்னூலா தாயகமே (நா)

சரணம்

தாகாவரம்பெற்று தாரணி எங்குமே
தன்னவம் பொழிந்திலங்கி விளங்குமே
தாதா என் மீதில்வாதா பெருமைபோதா தாயகமே (நா)

கஞ்சவிழி மடமாதர்கைகூண்டி
கவலையறவரமுக்திகள்வேண்டி
கருணாகரமே நற்றருணோதயமே கற்சரணாலயமே செல் (நா)

வர்ணகளபகதி கஸ்தூரிவாஸம்
ஹாத்திமுல்ஹம்பியாநற் குலநேசம்
கொண்டீர் அற்புதஜெயமுண்டீர் அந்தனகர்கண்டீர் தாயகமே ()

பாதகனென்று மதித்தின்னும் கடைக்கண்
பாராதிருந்தால் வழியுண்டோ சொல்லுங்காண்
பாவா முத்தமிழ்கவி ஞானரஷ்ணன் துதி காவாயனுதினகதி (நா)

விருத்தம்

குளிர்களப சந்த்ரபுஷ் பணிசுகிர்தபுயமந்த்ர
குணநிரைவு சூழ்ந்தவடிவே

குருவாரனத்தானு தினமுனாடுருவிஜெய
குலநாதசுந்த்ர வரதா

ஒளிர்பாதமம்புயமி லாடாதவீரியர்க
ளுலகெங்கு பார்த்திடினுமே
ஒருகாலுமெபடாது ஓங்காரவட்டத்தி
னுள்ளாடு ராஜயோகா
திளிர்கூவளத்துமலர் விழிமாதர் கெதியென்று
தேடியே கெஞ்சிநிற்க
திருவெலாமொன்று யிலங்கியேதேஜோ
மயனத்தினி சூழவொண்ணு
வளர்பூமி நடுமக்கவவதார நெறிநீதி
வளர்நாட்டி னுற்ற சுடரே
வாகாதி மகருஜ யோகாதி மலர்வாச
வாடாத முஸ்தபாவே

## நொண்டிச்சிந்து

ஆரணம் புகழ்குருவாம்—எங்கள்
அஹம்மது முஹம்மதென வந்த நபியாம்
சீர்பெரும் மக்கநகரும்—அதில்
செய்பிதாக வந்த நபினுதரிவரும்
பாவலர் புகழ்நிதியாம்—வழை
பைதலினை கார்த்துதவி துய்ய கெதியாம்
நாவினில் சிறந்தவரும்—நபி
நாயகருய் வந்த மஹமூதரிவரும்
முத்திரை தரித்தவரும்—வுயர்
முத்திதரும் மோக்ஷமதில் வித்துமிவரும்
அதினுங்கிழைமணியாம்—அப் துல்லா
அன்னலவர் பெற்ற திரு மைந்தரிவரும்
மங்கை யாமீனர் மகவாம்—கற்பு
மாதரசி பாத்துமாவின் தாதையிவரும்
ஸாஹிபுற சூலிவரும்—நாளை
ஸபாத்து செய்பவரும் நாயகருமாம்
சதுர்வேத நாதரிவரும்—பாரில்
சந்திரனை யழைத்திரு பங்கு செய்தோரும்
மான்பினை நின்ற நீதரும்—ஹபீபு
மன்னனின் தசையைமங்கை யாக்கி வைத்தோரும்
மூவுலகுக்கும் பதியாம்—பாடும்
முஹத்தீன் கண்ணுக்கருள் செய்யும் நிதியாம் (ஆர)

# டிராமா அதிசயம்

## அற்புதப் பூதம்முலாவிய ரப்பர்தோட்டம் என்ற மெட்டு

ஸங்கம் எங்கும் பெண்டுகள் நாடகம் ஆடக்காகூவி—ட்ராமா
தாளமேள கியானமென்பது அற்றுபோச்சு
எங்கும் நற்புகழ் கொண்ட ஆக்டர் இல்லாத பாக்யம்—பெண்களை
வற்றலாமே ரெண்டுகப்பல் கொள்ளாத சாத்யம்
தாருசாங்கம்யென்னும் புகழ்பெறும் ட்ராமாவின் நீதி—பெண்கள்
தாறைவேடம் பூண்டுநிர்மல மானுலெ கியாதி
ப்ரபல்யமோடு போட்டாபோட்டி கள்ளப்பார்ட்டு—பெண்கள்
போட்டு ஸ்டேஜில் பாடுவதோ தெம்மாங்கு பாட்டு
கண்ணிய ரென்னிய வுன்னிதஞானம் காணும்போதும்—கவி
ராஜன் மாமகிழ் பெற்றிலங்கும் ராமசாமி

பெண்டுகளிப்படியாமா—ட்ராமா
பேதமை செப்பிடலாமா—மனம்
ஒப்பியெ நண்பர் ஒன்ஸ்மோரென
கத்தியசத்தம் கும் கும் கும் மென் (ஸங்கம்)

## அடைக்கலமே என்றமெட்டு

### பல்லவி

போதுமடிஉன் குலப்பெருமை
புரட்டியாணுவங்காட்டி மிறட்டுகின்றாயே நின்று (போ)

### அநுபல்லவி

பேதேவுன் குலத்தை நம்பினோர் பட்டபாடு
பேருலகத்தில் சொன்னால் முடியுமோ இந்தப்போது
நீதுகளில்மிகுந்த சூது செய்தாடவரை
வாட்டி வஞ்சகம்பண்ணி மாட்டி வைத்திடும்கள்ளி (போ)

காணும் புருஷர்களை கடைக்கண் காட்டி
காசுபறிப்பதற்கு முறைபல நீட்டி
நானமகன்றுபல லீலைகள் காட்டி
நசக்கி பொருள் பறித்து கசக்கும் யேமாற்றி (போ)

கச்சைக்குள் இருக்கின்ற குடம் ரெண்டும் விஷமே
கறங்கள் தொட்டாலுடன் பகர்ந்திடும் ரஸமே
பச்சைப் பொட்டுமினுக்கும் பாம்பதின் படமே
பவக்குகை யிருட்டறை இவள்யோனித் தடமே (போ)

ஞானரத்தினன் மொழிக் கிழிவில்லை நன்று
நாய்களே யிந்தமுறை விட்டுவிடுங்களின்று
மானமொற்றுமையுடன் மனமடமச்சங்கொண்டு
மானிலத்திலிருப்பாய் போ போ என் முன்னம்நின்று (போ)